# மட்டக்களப்புப் பிரதேச பத்தாசி வழிபாடுகள் காட்டும் சமய நல்லிணக்கச் சிந்தனைகள்

*K.Sarweshwaran.,*[1] & *V.Gunapalasingam*[2]

sarwesh1177@gmail.com gunapalasingamv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

*கிழக்கிலங்கையில் பல்லின சமூகத்தவர்களும் இணைந்து வாழ்வதுடன் தங்களிடையே பண்பாட்டுப் பகிர்வு உடையவர்களாகவும் விளங்குகின்றார்கள். ஒவ்வொருவரது சமய வழிபாடுகளும் பிற சமயத்தவரை அணைத்துக் கொள்ளக் கூடிய வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளமையை இங்கு காணமுடியும். மட்டக்களப்பிலுள்ள இந்துசமய வழிபாட்டு மரபுகளில் ஆகமம் சார் மற்றும் ஆகமம் சாரா வழிபாடுகள் மிகவும் பிரசித்தி பெற்றனவாக விளங்குகின்றன. இங்கு வாழும் மக்கள் பலரும் இவ்விரு வழிபாட்டு மரபுகளிலும் அதீத நம்பிக்கையும், பற்றுதலும் கொண்டுள்ளார்கள். குறிப்பாக பத்தாசிசார் வழிபாடுகளில் பல்லின சமூகத்தவர்களும் ஒன்றிணையும் தன்மையை அவதானிக்க முடிகின்றது. பத்தாசிசார் வழிபாடுகளில் காணப்படும் உயிர்ப்புத் தன்மையும், அதிலுள்ள மக்கள் தொடர்புறும் வழிபாடுகளும் தொடர்ச்சியான அதன் பேணுகையை மட்டக்களப்பில் இன்று வரை நிலைத்திருக்கச் செய்துள்ளன. பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துசமயத்தவர்கள் என அனைவரும் கலப்புற்று வாழும் மட்டக்களப்பில் அனைத்து சமயத்தினரதும் பங்குபற்றலுக்குரியதாக பத்தாசிசார் வழிபாடுகள் அமைகின்றமையை அவதானிக்க முடியும். அண்மைக்காலங்களில் கல்வி வளர்ச்சி மற்றும் புரிந்துணர்வு என்பனவற்றால் இப் பல்லினப் பிணைப்பு சற்றுத் தலைத்தூக்குகின்றமையை அவதானிக்கலாம். மட்டக்களப்பின் பத்தாசிசார் வழிபாட்டுத் தலங்கள் பலவற்றில் பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களின் பல்வேறுபட்ட வழிபாடுகளுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களும் தம் சமயம் குறிப்பிட்ட தெய்வத்தோடு இணங்கிய வகையில் பத்தாசிசார் வழிபாட்டுத் தெய்வங்களை வழிபடும் தன்மையையும் பேணுகின்றார்கள். இவ்வாறான பிற சமயத்தவர்களின் ஈடுபாட்டையும், அச் சமயத்தவர் வாழ்வில் பத்தாசிசார் வழிபாடுகள் செல்வாக்குச் செலுத்தும் விதமும் இவ்வாய்வின் மையப்பொருளாகக் கொள்ளப்பட்டு ஆய்வு நகர்த்திச் செல்லப்படுகின்றது. பத்தாசிசார் வழிபாடுகள் நிகழும் ஆலயங்களில் தரவுகளைச் சேகரிக்க களஆய்வு முறையும், இது தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்களையும், கட்டுரைகளையும் ஆராய்ந்து கொள்ள விவரண ஆய்வு முறையும், பிற சமயங்களின் வழிபாடுகளோடு ஒப்பீடு செய்ய ஒப்பீட்டு ஆய்வு முறையும் ஆய்வு முறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான முதனிலைத் தரவாகப் பூசகர்கள் சிலரிடம் செவ்வி கண்டு பெறப்பட்ட தரவுகளும், இரண்டாம்நிலை தரவுகளாக இது தொடர்பாக வெளிவந்த ஏனைய கட்டுரைகள் மற்றும் நூல்களும் கொள்ளப்படுகின்றன. மட்டக்களப்பிற்கென்று தனித்துவமுடைய பத்தாசிசார் வழிபாடுகளில் பேணப்படும் சமய நல்லிணக்க சிந்தனைகளை ஆய்வு செய்து வெளிப்படுத்துவது இவ்வாய்வின் முக்கிய நோக்காகும். இவ்வாய்வு வெளிவருகையில் பத்தாசிசார் வழிபாடுகளில் காணப்படும் சமய நல்லிணக்கச் சிந்தனைகளும், அவை சமுதாயத்தின் இன ஒற்றுமைக்கு வழிவகை செய்யும் விதமும் வெளிப்படுத்தப்படும் என நம்பப்படுகின்றது. தற்கால சூழலில் மதத்தின் பெயரால் நிகழும் யுத்தங்களுக்கும், மதத்தை மறைமுகமாக்கி நடைபெறும் யுத்தங்களுக்கும் சமய நல்லிணக்கச் சிந்தனைகள் வலுக்குன்றியமையே காரணமாகும் என்பதன் அடிப்படையில் அதற்கொரு சிறுதெளிவை வழங்கும் நோக்கிலும் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. சமய நல்லிணக்கம் தொடர்பாகவும், சமயங்களின் இடையேயான புரிதலையும் கண்டுகொள்ள விரும்பும் நபர்களுக்கு இவ்வாய்வும் ஒரு துணையாக அமையும் என நம்பப்படுகின்றது.*

**திறவுச் சொற்கள் -** *வழிபாடு, நல்லிணக்கம், இந்துக்கள், இஸ்லாமியர்கள், நம்பிக்கைகள்*

---

[1] *MPhil Research Students, Eastern University Sri Lanka,*

[2] *Senior Lecturer, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University Sri Lanka.*

**ஆய்வுத் தலைப்பு**

*மட்டக்களப்புப் பிரதேச பத்தாசி வழிபாடுகள் காட்டும் சமய நல்லிணக்கச் சிந்தனைகள்,*

*என்பது ஆய்வின் தலைப்பாக அமைகின்றது.*

**ஆய்வு அறிமுகம்**

*இலங்கையின் கிழக்குக் கரையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் நிலப்பரப்புக்களை இணைத்த பகுதியாக கிழக்கு மாகாணம் விளங்குகின்றது. இக் கிழக்கிலங்கையின் வழிபாட்டு மரபுகளில் ஆகமம்சார் வழிபாடுகள், பத்தாசிசார் வழிபாடுகள் எனும் இருபெரும் வழிபாட்டு மரபுகள் காணப்படுகின்றன. இவை இப் பகுதிகளில் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவரும் தொல்குடிகளாகிய சைவத்தமிழர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவற்றுள் மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான சைவத்தமிழர்களின் நம்பிக்கையுடனும், பங்குபற்றுதலுடனும் பின்பற்றப்படும் தொன்மையான வழிபாட்டு மரபாகச் சிறப்புப் பெறுவது பத்தாசி வழிபாட்டு முறையாகும்.*

*இப்பத்தாசி வழிபாட்டு மரபுகள் பன்னெடுங்காலத்திற்கு முன் வாழ்ந்த ஆதிசைவர்களால் மரபின் அடிப்படையிலும் அவர்களறிந்த இறை அனுபூதியினடிப்படையிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் பின்னர் குடியேறிய கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த சமயத்தவர்கள் அனைவரும் தத்தமது சமயங்கள் கூறுகின்ற சமய நம்பிக்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் சுதந்திரமாக பின்பற்றி வருகின்ற போதிலும், அவர்களின் வாழ்வியலிலும், நம்பிக்கையிலும் கலப்புற்ற வழிபாடாக பத்தாசிசார் வழிபாடுகள் காணப்படுகின்றமை மறுப்பதற்கில்லை. இச் சமயத்தவர்கள் இப் பிரதேசத்தில் குடியமர்ந்த பின்னர் இங்கு பழங்காலந் தொட்டு சிறப்புப் பெற்றிருந்த பத்தாசி வழிபாடுகளை முழுவதுமாக ஒதுக்கி வைத்துவிடவில்லை.*

*இச் சமயத்தவர்கள் இந்துசமயத்தவர்களைக் கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டதாலும், கல்வி மற்றும், பொருளாதாரக் காரணங்களாலும் அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டிய சூழல் தோன்றியது. அதனால் அவர்கள் அனைவரது சமய வழிபாடுகளும் நல்லிணக்கத்துடன் அனைவராலும் பகிரப்பட்டன. பின்னர் நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தங்கள் மற்றும் வெளிநாட்டுடரான தொடர்புகள் முதலிய காரணங்களால் இவை சற்றுத் தளர்சியடைந்திருந்த போதிலும், முழுவதுமாக மறைந்துவிடவில்லை. இன்றும் சமய நம்பிக்கை கொண்ட மக்கள் சமயநல்லிணக்கத்துடன் பத்தாசிசார் வழிபாடுகளில் அதீத நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றமையை அவதானிக்க முடியும்.*

*இப் பத்தாசிசார் வழிபாடுகளிலும், அவற்றை விளக்கும் பத்தாசிகளில் ஒருசிலவற்றிலும் பிற சமயங்களுடனான நல்லிணக்க சிந்தனைகள் அதிகளவில் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிந்தது. அவற்றை வெளிப்படுத்தி சமயநல்லிணக்கத்திற்குத் துணை புரிதல் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.*

**ஆய்வுப் பிரச்சினை**

*உலகின் நவீன போக்குகளாலும், சமயப் பற்றாளர்களின் மாற்றங்களினாலும் மக்களிடையே சமயநல்லிணக்கச் சிந்தனைகள் வலுக்குன்றத் துவங்கியுள்ளதுடன், தத்தமது சமயங்கள் போதிக்கின்ற நல்லிணக்கச் சிந்தனைகளை உணராது பலரும் பிறசமயங்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுதலும் இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.*

**கருதுகோள்**

*மட்டக்களப்புப் பிரதேசத்தின் பத்தாசிகள் மரபானது வழிபாட்டு முறையைக் கூறுகின்ற ஆவணங்கள் மட்டுமல்லாது சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளையும், சமூக நல்லிணக்கச் சிந்தனைகளையும் எடுத்தியம்புவனவாக அமைந்துள்ளன என்பது ஆய்வின் கருதுகோளாகக் கொள்ளப்படுகின்றது.*

***ஆய்வு எல்லை***

*மட்டக்களப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட சடங்குக் கோயில்களில் பயில்நிலையிலுள்ள பத்தாசிகள் மட்டும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் வெருகல் முதல் நீலாவணை வரையான எல்லை மட்டக்களப்பு எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளமையால் அவ் எல்லைக்குட்பட்டமைந்த பத்தாசிச் சடங்குக் கோயில்களில் காணப்படும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன.*

***இலக்கிய மீளாய்வு***

*குறித்த ஆய்வுடன் தொடர்புபட்ட வகையில் வெளிவந்த நூல்கள், ஆய்வேடுகள், சஞ்சிகைகள், என்பன முன்னாய்வுகளாக அமைகின்றன. மட்டக்களப்புப் பிரதேச பத்தாசிகள் தொடர்பான கட்டுரைகளும், இலக்கியங்களும் படைக்கப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. அந்தவகையில் பின்வரும் நூல்கள் பற்றிய விபரங்களை நோக்க முடியும்.*

***கிழக்கிலங்கை கண்ணகை அம்மன் பத்ததிகளும் பாடல்களும்*** *(ஆறுமுகம்.கண,2013) எனும் நூல் பத்தாசிகள் பற்றிய அறிமுக விளக்கத்தை வழங்குவதோடு, கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்படும் கண்ணகை அம்மன் வழிபாட்டு சடங்குகளையும், அவற்றிற்கான பத்தாசிகளையும் விளக்குகின்றது. ஆனால் இந்நூலில் கண்ணகி அம்மன் பத்தாசிகள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. ஏனைய தெய்வங்களுக்கான பத்தாசிகள் விளக்கப்படவில்லை என்பதுடன் சமய நல்லிணக்கச் சிந்தனைகள் குறிப்பிடப்படவில்லை.*

***மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும்*** *(தில்லைநாதன்.எஸ்.,2008, பக்- 05 - 87) எனும் நூலிலே துறைநீலாவணைக் கண்ணகியம்மன் ஆலயம், பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், ஆகிய ஆலயங்கள் பற்றிய தல வரலாறுகளும், வழமைகளும், வழிபாட்டு மரபுகளும் விளக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த கோயில்களின் உருவாக்க வரலாறு மற்றும் வழிபாட்டு மரபுகள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ன.*

***இலங்கை திருநாட்டின் இந்துக் கோயில்கள்*** *(இந்து சமயத் திணைக்களம்,1984, பக் -360) எனும் நூலிலே இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள இந்துக் கோயில்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி மட்டக்களப்பிலுள்ள ஆகமம் சார், மற்றும் பத்தாசி சார் ஆலயங்களும் அவை தொடர்பான சுருக்கமான அறிமுகம் என்பனவும் விளக்கப்பட்டுள்ளன.*

***மட்டக்களப்பில் இந்து சமயக் கலாசாரம்*** *(தில்லைநாதன்.எஸ்.,2006, பக் - 236) எனும் நூலிலே மட்டக்களப்பு தொடர்பான கண்ணோட்டமும், குலமும், குடியும் ஆரம்பத்தில் விளக்கப்படுகின்றன. மட்டக்களப்பில் காணப்படுகின்ற குலமரபுகளும், குடி வழக்காறுகளும் இத் தலைப்பில் குறிப்பிடப்படுவதைத் தொடர்ந்து ஆகமம்சார் சமய அனுஸ்டானங்கள் தனித்தனியாக விளக்கப்படுகின்றன. அதைத் தொடர்ந்து அமைந்துள்ள வழிபாடு எனும் அத்தியாயத்தினுள்ளே சக்தி வழிபாடு, அம்மன் சடங்குகள், கொம்பு முறித்தல், வைரவர் வழிபாடு, ஐயனார் வழிபாடு, வதனமார் வழிபாடு, நாக வழிபாடு, பெரியதம்பிரான் வழிபாடு, முதலான பத்தாசிசார் வழிபாடுகள் பற்றிய மேலோட்ட விளக்கமும் விளக்கப்பட்டுள்ளன. சடங்கு எனும் தலைப்பிலமைந்த அறிமுகமும், மட்டக்களப்பிலுள்ள சில பத்ததிகள் பற்றிய அறிமுகமும் இந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

***மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும்*** *,(நடராசா.f.x.c,(தொகு),1980) எனும் நூலிலே மட்டக்களப்பின் மந்திர வழக்கம், மட்டக்களப்பு மக்களின் பண்பாடும், பழக்கவழக்கங்களும், கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில் முதலான தலைப்புக்கள் மட்டக்களப்பின் சடங்கு வழிபாடுகள் தொடர்பான சில விடயங்களைத் தெளிவுபடுத்துகின்றன.*

***கிழக்கிலங்கைப் வழிபாட்டுப் பாரம்பரியங்கள்*** *(தங்கேஸ்வரி.க,2008,பக்-169.) எனும் நூலில் திருப்படைக் கோயில்கள், மண்டூர் முருகன் கோயில், மட்டக்களப்பில் முருக வணக்கம், ஈழத்தில் பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியங்கள் முதலான தலைப்புக்களின் கீழ் மட்டக்களப்பின் காணப்படும் பாரம்பரிய வழிபாட்டு பழக்கவழக்கங்கள் அளவளாவப்பட்டுள்ளன.*

***சடங்குகளின் ஊடாக மட்டக்களப்பு*** *(சிவரெத்தினம்.சு,2008) எனும் நூலில் மட்டக்களப்பில் வதனமார் வரலாறும் சடங்கும், காத்தவராயன் கூத்து, மட்டக்களப்பு சமூகத்தில் சடங்குக்*

*கோயில்களின் முக்கியத்துவமும் அவற்றின் சமஸ்கிருத மயமாக்கமும் ஆகிய தலைப்புக்களின் ஊடாக மட்டக்களப்பில் நிகழ்நிலையிலுள்ள வதனமார், காத்தவராயன் வழிபாடுகள் பற்றியும், சடங்குக் கோயில்களின் முக்கியத்துவமும் அவற்றில் நிகழும் சமஸ்கிருத மயமாக்கலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.*

**ஆய்வின் நோக்கம்**

**முதன்மை நோக்கம்**

*சடங்குகளை வழிப்படுத்துகின்ற பத்தாசிகளில் காணப்படுகின்ற சமய நல்லிணக்கச்*

*சிந்தனைகளை வெளிக்கொண்டு வருதல்.*

**துணை நோக்கங்கள்**

*பத்தாசிகளிலுள்ள வழிபாட்டு மரபுகளில் பிற சமயத்தவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தல்.*

*அனைத்து சமயத்தவர்களும் தத்தமது சமயங்கள் போதிக்கும் நல்லிணக்கச் சிந்தனைகளை அறிய முற்படுதலுடன், அதைப் பேண விளைதல்.*

**ஆய்வு முறையியல்**

*மட்டக்களப்புப் பிரதே பத்தாசிகளில் காணப்படும் சமய நல்லிணக்கச் சிந்தனைகளை வெளிக்கொண்டு வர இவ்வாய்வில் விபரணமுறையியலே அதிகம் கையாளப்படுகின்றது. அத்துடன் வரலாற்றாய்வியல் அணுகுமுறையும், ஒப்பாய்வு அணுகுமுறையும் அவசியமான இடங்களில் கையாளப்படுகின்றன.*

*பத்தாசிசார் சடங்குகளைச் செய்கின்ற ஆலயங்களில் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படவுள்ளது. பூசகர்களையும், தெய்வாதிகளையும், அறிஞர்களையும் செவ்வி கண்டு பெறப்பட்ட தகவல்களும் இணைக்கப்பட்டுள்ளன.*

**ஆய்வு மூலங்கள்**

*மரபுவழிச் சடங்குகளை மேற்கொள்ளும் ஆலயப் பத்தாசிகள்; மற்றும் கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் என்பன இவ்வாய்விற்கான முதல்நிலைத் தரவுகளாக எடுத்தாளப்படுகின்றன. இவ்வாய்வுடன் தொடர்புபட்ட வகையில் வெளிவந்த ஏனைய கட்டுரைகளும்,ஆக்கங்களும்,நூல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைகின்றன.*

**ஆய்வின் பயன்கள்**

*மட்டக்களப்புப் பத்தாசிகள் காணப்படும் நல்லிணக்கச் சிந்தனைகளை வெளிக் கொண்டு வரமுடிதல். அவ்வாறு வெளிக் கொண்டு வரப்படும் நல்லிணக்கச் சிந்தனைகள் காரணமாக சமயங்களிடையே தெளிவான புரிதல் ஏற்படுதல். எதிர்கால சந்ததிகள் பிற சமயத்தவர்களுடன் இணங்கி வாழ வேண்டிய காரணத்தை அறிந்து கொள்ளுதல். பிற சமயத்தவர்களும், இந்துசமய வழிபாடுகள் தொடர்பான புரிதலைப் பெற்றுக் கொள்ள முடிதல்.*

***மட்டக்களப்புப் பிரதேச பத்தாசி வழிபாடுகள் காட்டும்***
***சமய நல்லிணக்கச் சிந்தனைகள்***

*இலங்கைத் திருநாட்டில் கிழக்குப் பகுதியில் சிறப்புற்று விளங்கும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல்வேறுபட்ட இனத்தவர்களும் இணைந்து வாழ்கின்றார்கள். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் முதலான சமயத்தவர்கள் இங்கு பரவலாக வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் மத வழிபாட்டுத் தலங்களும் இங்கு பல இடங்களில் சிறப்புற்று விளங்குகின்றன. பல் சமயத்தவர்களும் இணைந்து வாழும் பிராந்தியம் என்பதனால் இங்கு வரலாற்றில் பல இனக்கலவரங்களும் இடம்பெற்றுள்ளமையை அறிய முடிகின்றது. இருந்த போதிலும்*

*சமயங்களின் உண்மையான போதனைகளை ஏற்றுக் கொண்ட மக்கள் சமயத்தின் உண்மையான தாற்பரியத்தை உணர்ந்து சமயப் பொறையைக் கைக்கொள்கின்றார்கள்.*

*அவ்வாறு உண்மை மார்க்கத்தை உணர்ந்து கொள்ளாதவர்களே சமயங்களின் உண்மையான போதனைகளைக் கருத்திற் கொள்ளாது மதவாதக் கருத்துக்களைப் பிரசங்கம் செய்து மக்கள் மனதையும் மாற்றி கலவரங்களையும், சமூகப் பிரச்சினைகளையும் தூண்டுகின்றார்கள். உண்மையில் சமயம் என்றால் சமைப்பது என்பது பொருளாகும். சமைக்கப்பட்ட உணவே உண்பதற்குரிய பக்குவத்தில் அமைந்தது என்பது போல, சமயம் நம்மை இறைவனுக்குரியவர்களாக நல்மனிதர்களாகப் பக்குவப்படுத்தும் என்பதே சமயங்களின் தாற்பரியமாகும்.*

*இதனையே அனைத்துச் சமயங்களும் போதனை செய்கின்றன. இதன்படி அவரவர் அவரவர் சமயங்களை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளுதலே சமய நல்லிணக்கத்திற்கு வழிவகை செய்யும் என்பதில் மாற்றுக் கருத்துக்களில்லை. மட்டக்களப்பில் பிரசித்தி பெற்று விளங்கும் ஆகமம் சார் மற்றும் பத்தாசிசார் சடங்கு முறைகளிலும் இத்தகு சமய நல்லிணக்கச் சிந்தனைகளைக் காணமுடிகின்றது. இவற்றில் பத்தாசிசார் வழிபாட்டு மரபுகளில் காணப்படும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளை வெளிக்கொண்டு வருவதாக இவ்வாய்வு நகர்த்திச் செல்லப்படுகின்றது.*

### *பத்தாசி வழிபாடுகளும் சமய நல்லிணக்கச் சிந்தனைகளும்*

*மட்டக்களப்பிற்கென்று தனித்துவமுடையதாக அமையும் வழிபாடாகப் பத்தாசிசார் வழிபாடுகள் அமைகின்றன. இங்கு நிகழும் சமயச் சடங்குகளையும் அதன் வழிபாட்டு முறைகளையும் நெறிப்படுத்தும் ஓர் ஆவணமாக பத்தாசிகளைக் கருத முடியும். இப் பத்தாசிகள் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் நம்பிக்கைகளையும், வழிபாடுகளையும், குல மற்றும் குடி மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பிற சமயத்தவர்கள் தொடர்பான செய்திகளும் அவர்களுக்குரிய கௌரவங்களும், அவர்களோடு இணங்கி வாழ வேண்டிய நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி அனைத்துச் சமயத்தவர்களாலும் வழிபடப்படும் வழிபாட்டுப் பழக்கவழக்கங்களைப் பத்தாசிகள் தன்னகத்தே கொண்டுள்ளமையைக் காணமுடியும்.*

*இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பௌத்தர்கள் என்று அனைவரும் இப் பத்தாசி வழிபாடுகளில் பங்கு கொள்கின்றார்கள். அவர்கள் வழிபட இத்தகு ஆலயங்களும் ஒருசில நிபந்தனைகளுடன் அனுமதி தருகின்றன. அந்நிபந்தனைகள் புனிதத்தன்மை சார்ந்ததாக உள்ளதேயன்றி தடைகளை ஏற்படுத்தக் கூடியவையாக அல்ல. உதாரணமாக, பிற சமயத்தவர்கள் பத்தாசி வழிபாடுகளில் பங்கு கொள்ள முன்னர் குளித்துத் தலை முழுகி உலர்ந்த, நாகரிகமான, கவர்சியற்ற ஆடையணிந்து தலைவிரி கோலமின்றி பாதுகைகளைக் கழற்றிய பின் ஆலயத்திற்குள் பிரவேசிக்க முடியும். அத்துடன் மது, மாமிசம் முதலிய ஆச்சார குறைகளைக் கொண்டிராதவராகவும் வருகைதர வேண்டும்.*

*இத்தகு நிபந்தனைகள் மாத்திரமே இங்கு விதிக்கப்படுகின்றன. எனவே அனைத்துச் சமயத்தவர்களும் இத்தகு விதிமுறைகளைப் பின்பற்றி ஆலய வழிபாட்டில் ஈடுபட அனுமதி வழங்கப்படுகின்றது. இறைவன் தனி ஒருவருக்கு உரிமை உடைய ஒரு பொருளன்று. அவர் அனைவருக்கும் பொதுவானவர் மற்றும் சமமானவர். எனவே அனைவரும் அவரை வழிபடத்தக்க வழிகளை இந்துசமயம் குறிப்பிட்டுள்ளது. அதன்படியே பத்தாசி வழிபாடுகளிலும் அவ்வாய்வு அதிகமாக வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். பத்தாசி வழிபாட்டு மரபுகளில் தெய்வாதி கலையாடுதல் மற்றும் தெய்வாதி கலையைக் கட்டுதல், வெட்டுதல் ஆகிய நடைமுறைகளுண்டு. இவற்றில் பிற சமயத்தவர்களின் பங்களிப்பு அதிகம் இடம்பெறுவதனை மட்டக்களப்பில் காணமுடியும்.*

### *இஸ்லாம் கட்டு*

*'ஜின் ஜின்னுக்கே வந்து ஜின்ற சுழுக்கே வந்து*

*ரஸுலை வென்ற ரஸுலுக்கே வந்து...*

*நங் நங் நசி நசி மசி மசி*

*கட்டு கட்டு படு படு விழ விழவே சுவாஹா..'*

*(மந்திர ஏடு)*

**இஸ்லாமிய வெட்டு**

*'விஸ்வமில்லாஹி ரஹீமானே ரஹீம் ...*

*வாய் விட்ட பில்லி சூனியங்களை வெட்டினேன்*

*முழுகித் தொழுதேன்....*

*பேய்ச்சியும், நாச்சியும், ஐயனார் கூட்டம்...*

*ஆதி சிவனெனும் அல்லாவின் ஆணை வெட்ட வெட்டவே சுவாஹா'*

*(மந்திர ஏடு)*

**குறான் வெட்டு**

*'ஓம் சலியும் சறுவம் மாதர ஆதி அலியும் ரஹிலல்லா முஹம்மதூ றசூலல்லா...*

*அல்லாஹ்வின் ஆணை ஓடி வா அலியாராணை ஓடி வா அகமதுவாணை ஓடி வா...*

*ஒரு லட்சத்து இருபத்தெட்டாயிரம் நபிமாராணை ஓடி வா வா...*

*ஓடி வரவே சுவாஹா...'*

*(மந்திர ஏட்டுப் பிரதி)*

என்றமைந்த கட்டு மந்திரங்களையும், வெட்டு மந்திரங்களையும் இஸ்லாமிய சகோதரர்களும், இந்து சமயப் பூசகர்களும்; பிரயோகிப்பதைக் காண முடியும். இம் மந்திரங்களிலுள்ள குறிப்புக்கள்,

***'ஏஹம் ஸத் விப்ரா வஹுூதா வதந்தி'***

*(இருக்கு வேதம்)*

*எனும் இருக்கு வேதக் கருத்தை மேலும் உறுதிப்படுத்தி ஒரு தெய்வமே பலவாறு அழைக்கப்படுகின்றது என்பதை காட்டுவதாக அமைகின்றன. தெய்வாதிகள் கலையாடி வீதியுலா வருகின்ற பொழுது இஸ்லாமிய சகோதரர்கள் தம் மந்திரங்களால் தெய்வாதிகளைச் சோதித்துப் பார்க்க கட்டுவார்கள். இக் கட்டுக்களை பூசகர்கள் குறான் வெட்டால் வெட்டுவார்கள். இவ்வாறு பல கட்டு வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதிலும் குறிப்பாக இத்தகு மந்திரங்களுக்குரிய வெட்டு முறைகளும் கட்டு முறைகளும் வித்தியாசமானவைகளாகக் காணப்படுகின்றன. உதாரணமாக மேற்குறிப்பிட்ட கட்டு முறையைப் பிரயோகிப்பதற்கு கண்ணால் யந்திரம் வரைந்து பாக்கு உருட்டி விடும் முறை பின்பற்றப்படுகின்றது. அதேபோல அவ் வெட்டு முறைக்கு பாக்கு வெட்டியால் பாக்கு வெட்டும் முறை குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இவை விளையாட்டுக்கள் போல சுவாரஸ்யமாக இடம்பெறும் என்பதனால் இஸ்லாமிய சகோதரர்களும், இந்து சகோதரர்களும் போட்டி ரீதியில் இந் நிகழ்வுகளில் பங்கு கொள்வார்கள். பின்னர் மந்திரத்தால் கட்டிய இஸ்லாமிய சகோதரருக்கு வாழைப்பழங்கள் கொடுத்து வழியனுப்பி வைப்பார்கள். இந்நிகழ்வு பிறசமயத்தவர்களின் ஈடுபாட்டையும், அவர்களுக்கு வழங்கப்படும் கௌரவத்தையும் காட்டி நிற்கின்றது. அத்துடன் ஆலயத்திற்கு வருகை தரும் பிற சமயத்தவர்கள் தங்களின் குறைகளை முறையிட்டு நேர்த்தி கட்டுதலும், பின்னர் வேண்டுதல் நிறைவேறிய பின் நேர்த்தி செலுத்துதல் முதலான நிகழ்வுகளும் இங்கு இடம்பெறுகின்றன.*

*இச் சந்தர்பங்களில் பூசகர்களும், ஆலய நிர்வாகத்தினரும் அவர்களுடன் இணக்கமான முறையில் கலந்தாலோசிப்பார்கள். முதலில் தங்கள் பிரச்சினைகளை யாரிடம் கூறுவது என்று தயங்கி நிற்கும்*

பிற சமயத்தவர்கள் முதலில் பரிபாலனசபையினரை அணுகுவார்கள். அதற்குப் பரிபாலன சபையினர் அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து அவர்களின் தேவையைக் கேட்டறிந்து கொள்வார்கள். பின்னர் பூசகர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி இணக்கப்படுத்துவார்கள் பின்னர் பூசகர்கள் அவர்களின் குறையைக் கேட்டறிந்து மேற்கொள்ள வேண்டிய தீர்வை முன்வைப்பார்கள்.

பூசகர்களின் ஆற்றுப்படுத்தலின்படி நேர்த்தி கட்டி தம் வேண்டுதலை அச் சமயத்தவர்கள் முன்வைப்பார்கள். பின்னர் நேர்த்திக் கடன் செலுத்த விளைவார்கள். இவ்வாறாக பிற சமயத்தவர்களின் பங்குபற்றுதல் இப் பத்தாசிச் சடங்குகளில் ஒழுங்குபடுத்தப்படுகின்றமையைக் காணலாம். வேண்டுதல் நிறைவேறிய பின்னர் ஆடு, கோழி, மாடு முதலிய விலங்குகளை நேர்த்தியாகக் கொடுப்பதும், தீமிதித்தலும், மடிப்பிச்சை எடுத்;துக் கொண்டு கொடுத்தலும் இன்றும் பல பிற சமயத்தவர்களால் மேற்கொள்ளப்படும் நடைமுறைகளாக அமைந்துள்ளன. தங்களைப் பிடித்துள்ள பாதிப்புக்கள் தம்மை விட்டு விலக வேண்டும் என்ற நோக்குடன் ஆடு, கோழி, மாடு முதலிய விலங்குகளைக் காணிக்கை வழங்குகின்றார்கள்.

பல சந்தர்ப்பங்களில் துஸ்ட சக்திகளால் பாதிக்கப்படும் பிறசமயத்தவர்களின் குறை தீர்க்கும் இடங்களாக பத்தாசிக் கோயில்கள் அமைவதைக் காணமுடிகின்றது. மட்டக்களப்பிலுள்ள நம்பிக்கைகளின் படி பேய்பிடித்தல், சூனியப் பாதிப்பு, வசியம், கணவன் மனைவி ஊடல், கண்ணூறு, காய்ச்சல், தீராத உடல் வலிகள், குழந்தை வாய் பேசாமை முதலிய பல பாதிப்புக்களுக்கு முதலில் வைத்தியத்தை நாடும் மக்கள் வைத்தியத்தால் குணமாக்க முடியாது என்று அறிந்த பின்னர், அவற்றை அமானுஷ்யங்களாகக் கருதி தமது சமயங்களிலுள்ள நடைமுறைகளின்படி தீர்த்துக் கொள்ள முற்படுவார்கள்.

அல்லாத சந்தர்ப்பத்தில் அவரவர் மதகுருமாரின் ஆலோசனைகளின் படி சடங்குக் கோயில்களை அணுகுவார்கள். சில சந்தர்ப்பங்களில் அம் மதங்களைச் சார்ந்த மதகுருமாரே பூசகர்களோடு தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட நபரை அனுப்பி வைக்கும் நடைமுறைகளும் காணப்படுகின்றன. இங்கு பாதிக்கப்பட்டவரின் நோயும், பாதிப்பும் மற்றும் அதைக் குணமாக்க வேண்டிய நல்லெண்ணமுமே காணப்படுகின்றதேயன்றி நான் பெரியவன், நீ சிறியவன் என்ற சிந்தனைகளுக்கு இடமில்லை.

தம்மை நாடி வருபவரின் துன்பத்தை ஒரு வைத்தியர் தீர்த்து வைக்க முடியாதவிடத்து மற்றொரு துறை சார் தேர்ச்சி பெற்ற வைத்தியரிடம் நோயாளியை அனுப்பி வைத்தல் போன்றதாகவே இந்நடைமுறை பின்பற்றப்படுகின்றது. இவ்வாறு சடங்குக் கோயில்களை நாடிவரும் பிறசமயத்தவர்கள் பலர் காணப்படுகின்றார்கள். இவர்களுக்குரிய சடங்குகள் பத்தாசிகளில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றியே நிகழ்த்தப்படுகின்றன. எனினும் பத்தாசிகள் குறிப்பிடதாக சில செயற்பாடுகளையும் பூசகர்கள் சமய நல்லிணக்கம் கருதி நிர்ப்பந்தத்தின் பெயரில் மேற்கொள்கின்றார்கள்.

உதாரணமாக நோக்கினால், இஸ்லாமிய சகோதரர் ஒருவருக்கு துஷ்ட கலைகளினால் பாதிப்பு ஏற்பட்டவிடத்து அதைச் சுடலையில் கழிப்பார்கள். இங்கு பத்தாசியிலுள்ள நடைமுறைகளின் படி கழிப்புச் செய்து முடிந்த பின்னர் குறிப்பிட்ட சில தினங்கள் அவர்கள் வீட்டிலிருந்து திருநீறணிந்து உறங்குவதை வழக்கமாகக் கொள்ள வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர், இஸ்லாமியர் என்பதனால் அவரை துவா செய்து விட்டு உறங்குபடி மட்டுமே பூசகர்கள் பணிப்பார்கள் மாறாகத் திருநீறு அணிந்து கொள்ளும்படி வற்புறுத்த மாட்டார்கள். அத்துடன் அவர்கள் இந்துசமய விதிமுறைகளுக்கு முரணான மாட்டிறைச்சி உணவை உட்கொள்வதனால் அவர்களுக்கு அணிவிக்கப்படும் அட்சரக்கூடும் குறான் வாசகங்களோடு தொடர்புடையதாக மட்டுமே அமைந்திருக்கும்.

இச் செயற்பாடுகள் பிற மதத்தவர்களின் உணர்வுகளையும், அவர்களின் சமயச் சிந்தனைகளையும் மதிக்கும் தன்மையைக் காட்டுகின்றன. தம்மை நாடிவரும் மக்களின் துன்பத்தை தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்தி மதமாற்றங்களை மேற்கொள்ள வற்புறுத்தாது நோய்களைக் குணமாக்கும் தன்மையைப் பூசகர்கள் பின்பற்றுகின்றமை வரவேற்கத்தக்க விடயமாக அமைந்துள்ளது. இதேபோல பூசகர்களால் குணமாக்க முடியாத சில சந்தர்பங்களில் பிற சமய மதகுருமார்களிடம் செல்லும் படியும் பூசகர்கள் ஆற்றுப்படுத்துகின்ற நிகழ்வுகளும் இடம்பெறுவதுண்டு. பாம்புக்கடிக்கு விசக்கல் சில பள்ளிவாயில்களில் காணப்படும் அங்கு சென்று அதைக் குணமாக்கப்

பணிப்பதும், சில விகாரைகளிலுள்ள சந்நிதானங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நேர்த்திக்கடன் செலுத்த செல்லும்படி பூசகர்கள் கூறுகின்றமையும் இங்கு இணக்கப்பாட்டுடன் இடம்பெறுகின்றமையைக் காணமுடிகின்றது.

இதேபோல குறி பார்த்தல், மை பார்த்தல், தெய்வாதியிடம் திருவாக்குக் கேட்டல் முதலான நடைமுறைகளிலும் பிற சமயத்தவர்கள் பங்கு கொள்கின்றார்கள். இந் நடைமுறைகளில் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. பாக்கு வெட்டிக் குறி, சுளகுக் குறி, மட்டைக் குறி, கத்தரிக்கோல் குறி முதலான குறிகளையும், மை பார்தல் எனும் நடைமுறைகளையும் நம்பிக்கையோடு மேற்கொள்கின்றார்கள்.

தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் ஏதேனும் துஷ்ட கலைகளின் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதா என்று ஆராயவும், தங்கள் தொலைந்து போன அல்லது களவாடப்பட்ட பொருட்களைக் கண்டறியவும், இவ் வழிபாடுகளின் துணையை நாடுகின்றார்கள். மேலும் தம் எதிர்காலம் நலமுடையதாக அமையுமா என்று ஆராயவும், கல்வி, வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக வினவவும் இச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்கள். இச்சந்தர்பங்களில் பூசகர்கள் அவர்களுக்குத் தகுந்தாற் போன்று உதவி புரிவார்கள். இங்கு பூசகர்களுக்கும் பிற சமயத்தவர்களுக்கும் ஓர் இணக்கப்பாடு எட்டப்படுவதுடன் பிற சமயத்தவர்களுக்கும் அனுகூலங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

குறிகேட்டல் நடைமுறைகளில் மட்டைக்குறியில் பிற சமயத்தவர்களுக்கு அதிக நம்பிக்கை உண்டு. காரணம் வாழைமடல் கொண்டு பார்க்கப்படும் இம்மட்டைக் குறியின் இருபக்க மட்டைகளையும் தாங்களே பிடித்துக் கொண்டு அச் சக்தியை உணரக் கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்கு அமைகின்றமையே ஆகும். அத்துடன் அவர்களே கேள்வி கேட்டு விடை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் அதில் அமைகின்றது. அதேபோல அஞ்சனம் பார்க்கும் நடைமுறையில் நடைபெற்ற விடயங்களையும், நடந்த விடயங்களையும் முழுமையாகவும், தெளிவாகவும் கண்டு கொள்ளும் சந்தர்ப்பம் அமைவதனால் அஞ்சனத்திலும் பிறருக்கு அதீத நம்பிக்கை உண்டு.

தம் மனக்குறையை நேரடியாகக் கதைத்துத் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பத்திற்காக தெய்வாதிகளிடம் வாக்குக் கேட்பதற்கு பிற சமயத்தவர்கள் பலர் சடங்குக் கோயில்களுக்கு வருகை தருவதுண்டு. அச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மரியாதையளித்து மக்கள் இடம் வழங்குவதோடு முன்னுரிமை அளிப்பதையும் காணமுடியும். தெய்வாதிகளின் விளங்கிக் கொள்ள முடியாத உரையாடல் மொழியை பூசகர்களும் தெளிவாக விளங்கப்படுத்தி பிற சமய அடியார்களுக்குத் தெளிவுபடுத்துவார்கள். இவ்வாறாக அச் சந்தர்பத்தில் பிற சமயத்தவர்களுக்கும் இந்து சமய அடியார்களுக்கும் ஒரு நல்லிணக்கம் எட்டப்படுவதைக் காணலாம். இதனால் பிற சமயத்தவர்களும் தயக்கமின்றி இச்சடங்குகளில் பங்குபற்றுவதுடன் மக்களுடனும் இணங்கிப் பழகுகின்றார்கள்.

பிற சமயத்தவர்கள் ஆலயங்களுக்கு வருகைதருகின்ற போது இந்துசமய அடியார்கள் அவர்களை வித்தியாசமான கண்ணோட்டத்துடன் நோக்காமல் தங்களைப் போல் ஒரு பக்தர்களாகக் கருதி அனுசரிப்பதும் வரவேற்கத்தக்க விடயமாக அமைந்துள்ளமையைக் காணமுடியும். இச் சந்தர்ப்பத்தில் தெய்வாதியாகக் கலையாடுபவர்களுடன் நேரடியாகக் கதைத்து தங்கள் பிரச்சினைகளைத் தெரிவிக்கக் கூடிய சந்தர்ப்பமும் அவர்களுக்கு வாய்க்கப்பெறுகின்றது. தமக்கு உரிமையுடையவர்கள் போலவே தெய்வாதிகளிடம் விவாதம் செய்தும், அழுது வேண்டியும் தம் பிரார்த்தனைகளை அவர்கள் சமர்ப்பிக்கின்றார்கள். பின் அது பலிதமாகும் போது தம் நேர்த்திகளைச் செலுத்துகின்றார்கள்.

சில பத்தாசிகளில் பிற சமயத்தவர்களைக் கௌரவிப்பதற்குரிய சடங்கு முறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. உதாரணமாக அடையல் பத்தாசியல் பட்டாணிமாருக்குரிய யந்திரமும், மந்திரமும் மடைப் பிரிவும் குறிப்பிடப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. பட்டாணிகள் என்பவர்கள் பஷ்தூண்கள் அல்லது ஆப்கானியர்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். வடமேற்கு இந்தியாவிலிருந்து ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் எல்லைகள் வழியே இந்தியாவிலும், இலங்கையிலும் குடியேறிய பழமையான முஸ்லிம் இனக்குழுவினர் ஆவர்.

ஆரம்பத்தில் துணிகளைக் காவுதடியில் வைத்துக் காவிக் கொண்டு சென்று விற்பனை செய்தவர்களாக காணப்பட்டார்கள். சில சந்தர்பங்களில் கூலிப் படையினராகவும், உருது மொழி பேசுபவர்களாகவும் காணப்பட்டார்கள். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த முக்குகர்கள் மற்றும் திமிலர்கள் ஆகியோருக்கு இடையிலான போரில் பட்டாணியர்கள் முக்குகருக்கு அதரவாக போர் புரிந்து வெற்றியீட்டிக் கொடுத்தார்கள் என்று கூறப்படுகின்றது. இப்போரில் தோற்ற திமிலர்கள் வெருகல் வரை துரத்தியடிக்கப்பட்டதற்கு பட்டாணிகளின் வீரமும், கம்பீர தோற்றமும் காரணம் என்று குறிப்பிடப்படுகின்றது. இதனை மட்டக்களப்பு மான்மியம் எடுத்துரைக்கின்றது.

கிழக்குக் கடற்கரையோரங்களினூடாக கடல்வழி போக்குவரத்தை மேற்கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்ட பட்டாணிகளுக்கு தமது போரில் உதவிய காரணத்தினால் முக்குகர்கள் இன்றைய ஏறாவூரைத் தங்குமிடமாக வழங்கியதாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது. இதன்படி ஏறாவூர் காளிகோயிலை அடிப்படையாகக் கொண்ட கனவுகண்ட அடையல் பத்தாசியில் இப் பட்டாணிகளுக்கென்று ஒரு மடைப்பிரிவு வைக்கப்பட்டுள்ளதையும் பின் சடங்கின் நிறைவில் அவர்கள் அதை வந்து பெற்றுச் சென்றார்கள் என்றும் அறிய முடிகின்றது. தற்காலத்தில் அப் பட்டாணியர் என்ற பெயர்கள் உபயோகிப்பது குறைந்தாலும், அப் பத்தாசியின் அடிப்படையில் பட்டாணி யந்திரம் கீறி, பட்டாணி மடை வைத்துப் பூசை முடிக்கின்றார்கள். இன்றும் ஒரு சில இஸ்லாமிய சகோதரர்கள் அம் மடையைப் பெற்றுக் கொள்ள வருகை தருகின்றார்கள். இந் நிகழ்வு பிற சமயத்தவர்களுக்கு பத்தாசி வழிபாடுகளில் வழங்கப்பட்டுள்ள உரிமையைக் காட்டுவதோடு அது இன்றும் நல்லெண்ணத்துடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையையும் காட்டுகின்றது.


**'மாந்தைக் கம்மாளருக்கும் மக்கத்துச் சோனியர்க்கும் உறவுண்டு'** என்றொரு கூற்று வயது முதிர்ந்தவர்களின் வாயிலிருந்து இன்றும் வெளிப்படுவதுண்டு. பழம்பெரும் துறைமுக நகரமாக விளங்கிய மாந்தையில் வியாபாரத்திற்காக மக்காவில் இருந்து வந்த இஸ்லாமியர்கள் பருவக் காற்றுக் காரணமாக ஆறு மாதங்கள் வரை மாந்தையிலேயே தங்கியிருந்து அங்கிருந்த கம்மாளர்களுக்கு ஏவல் வேலை செய்தார்கள் என்றும் அதன் வாயிலாகவே அவர்களிடையே உறவு ஏற்பட்டது என்று அறிய முடிகின்றது.

**'மக்கத்துத் துலுக்கர்**
**மாந்தைக் கண்ணுளர்**
**பக்கத்திற் கேய்ந்த பள்...'**

*(கந்தையா ஆச்சாரி.ஆர்.எஸ்.,1954)*

இதன்பின்னர் மாந்தையிலிருந்து திருகோணமலைக்கு கடல் வழிமூலம் பரவலடைந்த கம்மாளர் பின் அங்கிருந்து ஏறாவூர், போரதீவு முதலான பிரதேசங்களுக்குக் குடிபெயர்ந்தார்கள். இதன்படியே ஏறாவூரில் குடியமர்ந்த கம்மாளர் தம் குல தெய்வம் காளிக்கு அமைப்பித்த கோயிலிலும் தம் பத்தாசியிலும் தம் நீண்ட கால உறவினர்களான மக்கா இஸ்லாமியர்களுக்கு கௌரவமளிக்க மடைப்பிரிவொன்றை உருவாக்கினார்கள் என்று அறிய முடிகின்றது. இதன்படியே அவ்வுறவு இன்றும் பலமடைந்துள்ளதைக் காணலாம்.

அடையல் பத்தாசியிலுள்ள பட்டாணி யந்திரம்




**பட்டாணி மந்திரம்**

*ஓம் பட்டாணி மந்ராய நம வரு வரு ... சுவாஹா...'*

*(அடையல் பத்தாசி)*

*பட்டோலை எனப்படும் வைத்திய மூலிகை அரிச்சுவடி ஒன்றும் மட்டக்களப்பில் அனைத்து மக்களாலும் பேணப்படுகின்ற ஒன்றாக அமைந்துள்ளதைக் காணலாம். பட்டோலை என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கையின்படி இறுதித் தீர்ப்பு நாளில் மனிதர்களின் நன்மை, தீமைகளை பதிவு செய்து வைத்துள்ள குறிப்பேடு என்று கருதப்படுகின்றது. ஆனால் சில இஸ்லாமியர்கள் பட்டோலைக் கடைகள் என்று தமிழ் மூலிகை மருந்துகளை விற்கும் கடகளை நடாத்துகின்றார்கள்.*

*அவர்களிடம் செவ்வி கண்ட போது அவர்களின் நம்பிக்கைப்படி பட்டோலை என்பது நன்மை தீமைகளைப் பதிவு செய்து வைத்துள்ள குறிப்பேடு என்றுதான் பொருள் கொள்ளப்படுவதாகவும், ஆனால் தாம் பட்டோலைக் கடைகள் என்று வைத்துள்ள வியாபார நிலையங்கள் ஏடுகளிலுள்ள பழைய தமிழ் மருந்துகளை கொண்டவை என்றும் குறிப்பிட்டார்கள்.*

*இதன்படி தமிழர்களும், இஸ்லாமியர்களும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்ததனால் பத்தாசி வழிபாடுகளுடன் தொடர்புபட்டமைந்த வைத்திய ஏடுகள் அவர்களிடமும் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்ததோடு, யுனானி வைத்திய முறைகளைக் கொண்ட மருந்துகளும் தமிழர்களிடையே புழக்கத்திலிருந்துள்ளமையும் அறியக் கிடைக்கின்றது.*

*பத்தாசிகளோடிணைந்த நாட்டு வைத்திய முறைகளைச் சமய பேதங்களின்றி அனைவரும் கைக்கொள்கின்றார்கள். உளுக்குப் பார்த்தல், காய்ச்சலுக்குத் திருநீறு போடுதல், பிரசவம் பார்த்தல், தீராத் தலைவலி, வாதம், பித்தம், கபம் முதலிய திரிதாதுக்களுடன் தொடர்புபட்ட நோய்களுக்கான தீர்வு, மருந்துக் கட்டி வீழ்த்துதல், கற்பப் பிரச்சினைகள் முதலிய பல நோய்களுக்கான தீர்வுகளைப் பத்தாசிகளும், வைத்திய ஏடுகளும் குறிப்பிடுகின்றன. இவை பூசகர்களாலும், நாட்டு வைத்தியர்களாலும் அனைவருக்கும் சமமானதாகப் பிரயோகிக்கப்படுகின்றன. இவை சமயம் கடந்த மனிதத்தைக் காட்டுகின்றன.*

*பௌத்தர்களும் இந்துக்களும் பன்னெடுங்காலம் தொடக்கமே கொண்டும் கொடுத்தும் வாழ்ந்தவர்கள் என்ற ரீதியில் பௌத்த சமயத்தாருடன் நல்லிணக்கம் காணப்பட்டது. அதன்படி பௌத்த சமயத்தின் பாளி மொழியிலமைந்த பல மந்திரங்கள் பத்தாசிகளில் இடம்பிடித்துள்ளமையையும் காணமுடிகின்றது. பாளிக் கட்டு, பாளி வெட்டு என்று அவை அமைகின்றன. இவற்றையும் பூசகர்கள் பிரயோகம் செய்கின்றார்கள்.*

***சிங்கள வெட்டு***

*ஓம் சிறிலாட்டா அவிட்டக் கதுட்டக் கம்கமாமேரி...*

*ஆட்டக்க நவட்டக்க கசுருலாட்ட பிசாசுகள்*

*கூகு கூகு கெ கெ விட்டினு தெய்யோ ...*

*கினி கினி கச்சியே நம...'*

*(மந்திர ஏட்டுப் பிரதி)*

*பௌத்தர்களால் வழிபடப்படும் இந்துத் தெய்வங்களில் மட்டக்களப்பு பத்தாசி வழிபாட்டிற்குரிய முக்கிய தெய்வமான கண்ணகியம்மனும், காளியம்மனும், மதுரைவீரன், வீரபத்திரர், முருகன் முதலான கடவுளர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை ஆராதிக்கும் பத்தாசி வழிபாடுகளையும் அஞ்சனம் முதலிய செயற்பாடுகளையும் பௌத்தர்கள் ஏற்று வணங்குகின்றார்கள். விஸ்ணுவின் அவதாரமாகக் கருதப்படும் கௌதம புத்தர் பௌத்தத்தின் பிரதான கடவுள் என்பதனால் விஸ்ணுவின் நரசிம்மர் முதலான கலைகளையும் பௌத்தர்கள் ஏற்கின்றார்கள். இதன்படி பௌத்தர்களுக்கும் பத்தாசி வழிபாடுகளில் இடமுண்டு என்பது தெளிவாகின்றது. எனவே மேற்குறித்த சிந்தனைகளின் வாயிலாக மட்டக்களப்பிலுள்ள பத்தாசி வழிபாட்டுச் சடங்குகளில் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் முதலான பிற சமயங்கள் தொடர்பான நல்லிணக்கச் சிந்தனைகள் அதிகம்*

காணப்படுகின்றன என்பதுடன் அவை இன்றும் அனைத்து தரப்பு மக்களாலும் ஏற்கப்பட்டு பின்பற்றப்படுகின்றன என்பதும் தெளிவாகின்றது.

எனவே ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்குகின்றபோது ஒவ்வொரு சமய வழிபாட்டு மரபுகளும் மனிதனை மனிதம் உடையவனாக வாழ வழிகாட்டுகின்றன என்பதுடன், அவற்றை ஒவ்வொரு சமயத்தவர்களும் நன்குணர்ந்து அவரவர் அவர்அவர் சமயங்களைச் மிகச் சரியாகப் புரிந்து கொண்டு தங்களுக்கும், ஏனையோருக்கும் இடையூறு இல்லாத வாழ்வை வாழ தலைப்பட வேண்டும் என்பது உணர்த்தப்படுகின்றது.

அவ்வாறானதோர் சமூக நல்லிணக்கத்திற்கு மட்டக்களப்பு வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகவும், இம் மண்ணின் தனித்துவ புராதன அடையாளமாகவும் விளங்கும் பத்தாசி வழிபாடுகள் துணையாக அமைந்துள்ளன என்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது. மேலும் இதனூடாக ஆய்வின் கருதுகோளாகிய மட்டக்களப்புப் பிரதேசத்தின் பத்தாசிகள் மரபானது வழிபாட்டு முறையைக் கூறுகின்ற ஆவணங்கள் மட்டுமல்லாது சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளையும், சமூக நல்லிணக்கச் சிந்தனைகளையும் எடுத்தியம்புவனவாக அமைந்துள்ளன என்பது இறுதியில் மெய்பிக்கப்படுகின்றது.

**உசாத்துணைகள்**

*முதன்மைச் சான்றாதாரங்கள்*

- *அடையல் பத்தாசி,*
- *பெரிய தம்பிரான் பத்தாசி,*
- *கும்பப் பத்தாசி,*

**நூற் சான்றுகள்**


- *ஆறுமுகம்.கண.,(2013), 'கிழக்கிலங்கை கண்ணகை அம்மன் பத்ததிகளும் பாடல்களும்'இ சண் அச்சகம், மட்டக்களப்பு.*
- *தில்லைநாதன்.எஸ்.,(2008), 'மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும்', எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு.*
- *இந்து சமயத் திணைக்களம்,(1984), 'இலங்கை திருநாட்டின் இந்துக் கோயில்கள்', பிரதேச அபிவிருத்தி அமைச்சு, இந்து சமயத் திணைக்களம்.*
- *தில்லைநாதன்.எஸ்.,(2006), 'மட்டக்களப்பில் இந்து சமயக் கலாசாரம்',மணிமேகலைப் பிரசுரம்.*
- *நடராசா.கு.ஓ.ஊ,(தொகு),(1980), 'மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும்',இந்து வாலிபர் முன்னணி*
- *தங்கேஸ்வரி.க,(2008), 'கிழக்கிலங்கைப் வழிபாட்டுப் பாரம்பரியங்கள்',மணிமேகலைப் பிரசுரம்.*
- *சிவரெத்தினம்.சு,(2008), 'சடங்குகளின் ஊடாக மட்டக்களப்பு'இ விபுலம் பதிகம், மட்டக்களப்பு.*


**நேர்காணலின் போது தகவல் வழங்கியவர்கள்**

| இல. | பெயர் | ஊர் | வயது | தொழில்; | சந்தித்த திகதி |
|---|---|---|---|---|---|
| *1* | பௌசி நானா | காத்தான்குடி | *41* | வியாபாரி | *2026.05.01* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *2* | ஆ.கார்த்திகேசு | மங்கிக்கட்டு | *71* | நாட்டு வைத்தியர்,<br>பூசகர். | *2026.05.10>* |
| *3* | க.சீனித்தம்பி | ஆரையம்பதி | *71* | பூசகர் | *2026.05.06*<br>. |
| *4* | மா.சுப்பிரமணியன் | அம்பிளாந்துறை | *61* | விவசாயி, | *2026.05.13*<br>. |
| *5* | கா.லக்ஸன் | வெல்லாவெளி | *23* | பூசகர்; | *2026.05.02.* |
| *6* | மதுஸ | கருவப்பங்கேணி | *36* | பௌத்த துறவி | *2026.05.11* |